1 டிசம்பர் 2023

அன்பு பெற்றோர்களே,

**<u>‘நிமோகாக்கல்’ நோயிலிருந்து உங்கள் பிள்ளைகளைப் பாதுகாக்கவும்</u>**

மலேசியா சுகாதார அமைச்சு 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் பிறந்த குழந்தைகளுக்கு ‘கெட்சப் நிமோகாக்கல்’ (CHUPP) தடுப்பூசியை இலவசமாக வழங்குகிறது.

இந்தத் தடுப்பூசி நுரையீரல் பாதிப்பு, காது தொற்று, இரத்தத் தொற்று, மூளை பாதிப்பு மற்றும் உயிர் சேதம் போன்ற கடுமையான பாதிப்பைக் கொடுக்கும் ‘நிமோகாக்கல்’ நோயிலிருந்து உங்கள் குழந்தைகளைப் பாதுகாக்கும். மலேசியாவில் ஐந்து வயதுக்குட்பட்ட மற்றும் அதற்குக் குறைவான வயதுடைய குழந்தைகளுக்கு ஏற்படும் கடுமையான நோய் மற்றும் இறப்புக்கு ‘நிமோகாக்கல்’ நோய் முக்கிய காரணமாகும்.

இந்த *CHUPP* பிரச்சாரத்தின் கீழ், தகுதியான குழந்தைகள் அவர்களுக்குப் போதுமான பாதுகாப்பை வழங்கும் இந்தத் தடுப்பூசியின் ஒரு மருந்தளவைப் பெறுவார்கள். எனினும், **அடுத்தாண்டு (2024) மே மாதம் வரை மட்டுமே** இந்தத் தடுப்பூசி இலவசமாக வழங்கப்படும். ஆதலால், உங்கள் குழந்தைகளும் இந்தத் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்கு 'மைசெஜாத்ரா' செயலி வாயிலாக அல்லது அருகாமையிலுள்ள அரசாங்க சிகிச்சையகங்களில் சந்திப்பு முன்பதிவு செய்து கொள்ளுமாறு உங்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

எந்நேரத்திலும் ‘நிமோகாக்கல்’ தொற்று ஏற்படலாம். ஆகவே, இந்த *CHUPP* பிரச்சாரத்தின் பயனை நுகர்ந்து மற்றும் விரைந்து இலவச ‘கெட்சப் நிமோகாக்கல்’ தடுப்பூசியை உங்கள் குழந்தைகளுக்குச் செலுத்தி அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்து கொள்ளுங்கள்.

மேல் விவரங்களுக்கு https://immunise4life.my/chupp/ அகப்பக்கத்தை வலம் வாருங்கள். உங்களுக்கு ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால், secretariat@immunise4life.my வாயிலாக *Immunise4Life (IFL)* செயலகத்தைத் தொடர்பு கொள்ளுங்கள்.

இப்படிக்கு,
*Immunise4Life (IFL)* புரோகிராம்



பேராசிரியர் டத்தோ டாக்டர் சுல்கிஃப்லி இஸ்மாயில்
தொழில்நுட்பச் செயற்குழுத் தலைவர்

**Immunise4Life Secretariat** c/o Ultra Works Sdn Bhd
23-5, Block B, The Suites, Jaya One, 72A Jalan Profesor DiRaja Ungku Aziz, 46200 Petaling Jaya, Selangor, Malaysia
Email: secretariat@immunise4life.my Tel: +6012 284 1628